திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பண வீக்கத்தின் காரணமாக இன்றைக்கு ஒரு ரூபாயினுடைய மதிப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. என்றாலும் 1960லே ஒரு ரூபாய் என்று கணக்கு வைத்தால், பத்திரிகையிலே வந்திருக்கிற செய்திப்படி, மத்திய அரசு வெளியிட்டிருக்கிற எக்கனாமிக் சர்வே என்ற அளவு படி, இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு 17 காசுதான் மதிப்பு உடையதாக இருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றியும், அதை ஒட்டி பண வீக்கம் சம்பந்தப் பட்ட புள்ளி விவரங்கள் பற்றியும் இங்கே தகவல்கள் கொடுத் திருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு இரண்டாவது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்குகிறபோது மற்ற எதிர்க்கட்சிகளைக் கலந்து உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த அவையிலே கோருகிறோம், மைய அரசு திட்டங் களை உருவாக்குகிறபோது மாநில அரசுகளைக்கலந்திட வேண்டும் என்று, இந்த ஆண்டு ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்குகிறபோது பிற எதிர்க்கட்சிகளைக் கலந்து ஆலோசிக்கவில்லையா அல்லது அதில் என்ன நிலைமை என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு இல்லை. அது பற்றிய நிலைமையை ஆராய்ந்து பின்னர் தெரிவிக்கப்படும்.

1977-1982 வரை மைய அரசுக்கு மாநில அரசு வழங்கியுள்ள நிலம்.

269 (*வினா எண் 4956.)—*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1977–1982ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் மைய அரசுக்கு மாநில அரசு எவ்வளவு நிலம் வழங்கியுள்ளது ?

(ஆ) அதற்கு மைய அரசு மாநில அரசுக்கு வழங்கிய தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) 5683—6[illegible] ஏக்கர்.

(ஆ) ரூபாய் 4.19 கோடி.

1984 மார்ச் 12]

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கிரயம் வாங்காமல் மத்திய அரசுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட நிலத்தினுடைய அளவு என்ன ? அந்த நிலத்தினுடைய மதிப்பீடு என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அதேபோல நிலக் கிரயம் வாங்கிக் கொண்டு மாநில அரசினுடைய சார்பில் மைய அரசுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய நிலத்தினுடைய அளவு என்ன என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு முடிய நிலக் கிரயம் பெற்று மாறு செய்யப்பட்ட நிலத் தினுடைய மொத்த அளவு 3,890 ஏக்கர் நிலம். அதனுடைய மதிப்பு 1 கோடியே 40 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய்.

சில இடங்களில் சகாய விலையில், சகாய விலை என்றால், கொஞ்சம் விலை வாங்கிக் கொண்டு, மாற்று செய்யப்பட்ட நிலம் 64 ஏக்கர். இலவசமாக மாறு செய்யப்பட்ட நிலம் 1,728 ஏக்கர் 65 சென்ட். அதனுடைய மொத்த விலை 1 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குறிக்கோளின் அடிப்படையில், எதற்காக வேண்டி இவ்வளவு நிலத்தை ஆர்ஜிதம் செய்து, மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்தது என்பதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இலாக்காக்களின் மூலமாக பல்வேறு காரியங்களுக்காக மாநில அரசு அவர்களுக்கு ஆர் ஜிதம் செய்து அரசு நிலங்களைக் கொடுத்திருக்கிறது. உதாரண மாகச் சொல்லவேண்டும் என்றால், தபால் தந்தி துறை, ரயில் துறை, பாதுகாப்புத் துறை, அகில இந்திய வானொலித் துறை, மத்திய மின் ஆராய்ச்சித் துறை, சேலம் இரும்பு ஆலை, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் போன்ற பல்வேறுபட்ட துறை களின் வளர்ச்சிப் பணிகளுக்காகவும், மற்றவைகளுக்காகவும், மத்திய அரசுக்கு மாநில அரசு நில ஆர்ஜிதம் செய்து, சகாய விலையிலும், இலவசமாகவும் கொடுத்திருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS